# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 197/மா/2019
ஆணை நாள்: 12.02.2020

திரு. A. மனோகரன்,
திண்டுக்கல். – **முறையீட்டு மனுதாரர்**

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாநகராட்சி, புதூர் ரவுண்டு ரோடு, ரயில்வே காலனி ரோடு, எண். 86/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. மனோகரன் என்பவரது முறையீட்டு மனு 22.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 197/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தான் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அரசு அறிவித்துள்ள 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி, திருத்திய ஓய்வூதியம் மற்றும் நிலுவைத் தொகை வழங்க முறையீடு செய்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 9.12.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ள 13.1.2020 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் திரு. A. மனோகரன் பதிவுரு எழுத்தராக

பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.12.2016 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார் என்றும், தனியருக்கு பல்வேறு இனங்களின் கீழ் ரூ.9,55,410/- (ஒன்பது லட்சத்து ஐம்பத்தைந் தாயிரத்து நானூற்று பத்து மட்டும்)-க்கான ஓய்வூதிய பயன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், இம்மாநகராட்சி சிறப்புநிலை நகராட்சியாக இருந்து 19.02.2014 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறதென்றும், திண்டுக்கல் நகராட்சியாக இருந்த போது ஓய்வுபெற்ற / பணியிடைக்காலஞ்சென்ற பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பயன்கள், பணிக்கொடைகள், தொகுப்பு தொகை, மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியங்கள், சென்னை உள்ளாட்சிநிதி இயக்குனரகத்தால் வழங்கப்பட்டு வந்தது என்றும், மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற / பணியிடைக்காலம்சென்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய பயன்கள் / பணிக்கொடைகள், தொகுப்பு தொகைகள், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியங்களுக்காகும் செலவினங்கள் அரசிடமிருந்து கூடுதலாக / சிறப்பினமாக மான்ய தொகை ஏதும் விடுவிக்காத நிலையிலும், இம்மாநகராட்சிக்கு கூடுதல் வரவினங்கள் ஏதும் இல்லாத நிலையிலும், மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறதென்றும், மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டிய நிலுவை பொறுப்பு தொகைகளை வழங்கி பொறுப்பு சுமை பெருமளவு குறைந்த பிறகு 7வது ஊதியக்குழு நிலுவை தொகைகளை வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற விபரம் அனைத்து மனுதாரர்களுக்கும் மனுதாரரைச் சார்ந்த ஓய்வூதியர் சங்க பிரதிநிதிகளுக்கும் நேரடியாக பலமுறை தெரிவிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 9.12.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 21.1.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தான் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து 31.12.2016ல் ஓய்வு பெற்றதாகவும் 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ஓய்வூதியம் மற்றும் அதற்கான நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்றும், தனக்கு திருத்திய ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான எந்தவித பதிலும் மாநகராட்சியிடம் இருந்து வரவில்லை என்றும், அதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீது விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 12–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1) திரு. A. மனோகரன்,
பதிவுரு எழுத்தர் (ஓய்வு),
86/1, ரயில்வே காலனி ரோடு,
ரவுண்டு ரோடு, புதூர்,
திண்டுக்கல் – 624 005.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்